# அரசு மருத்துவக் கல்லூரி

# நாமக்கல்

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**தகவல் கையேடு**

# அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல்

## தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 கையேடு


| வ. எண். | தகவலின் விவரங்கள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | அரசு மருத்துவக் கல்லூரியின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(i)-இன் கீழ்) | 3 |
| 3 | அலுவலக அமைப்பு ___ அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(ii)-இன் கீழ்) | 6 |
| 4 | முடிவுகள் எடுப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(iii)-இன் கீழ்) | 7 |
| 5 | பணிகளைச் செய்வதற்காக வகுக்கப்பட்ட விதிமுறைகள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(iv)-இன் கீழ்) | 8 |
| 6 | பணிகளை செயல்படுத்துவதற்கான விதிகள், ஒழுங்குமுறை விதிகள், நெறிமுறைகள், கையேடுகள் மற்றும் ஆவணங்கள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(v)-இன் கீழ்) | 9 |
| 7. | அலுவலர்களின் தொடர்பு எண். (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(ix)-இன் கீழ்) | 10 |
| 8. | நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி வரவு ___ செலவு திட்ட ஒதுக்கீடு | 10 |
| 9. | கல்லூரியின் செயல்பாட்டு விபரங்கள் | 10 |
| 10. | தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளின் விபரங்கள் | 11 |
| 11. | பொதுதகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பெயர், பதவி விபரங்கள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(xvi)-இன் கீழ்) | 11 |
| 12. | மருத்துவக் கல்லூரி பணிஇடங்கள் ஒப்பளிப்பு விபரங்கள் | 11 |
| 13 | கல்லூரியில் செயல்படும் துறைகளின் விபரங்கள் | 11 |
| 14. | கல்லூரியில் செயல்படும் திறன் மற்றும் சமூக நலன் விழிப்புணர்வு குழுக்கள் | 12 |
| 15. | உள்கட்டமைப்பு வசதிகள் | 13 |
| 16. | மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் | 13 |
| 17. | இதர பிற வசதிகள் | 14 |
| 18. | கல்லூரி கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் பராமரிப்பு | 14 |
| 19. | இதர சேவை பணிகள் | 14 |

# 1. அறிமுகம்

1.1. பொது அதிகார மன்றத்தின் ஒவ்வொருவரின் செயல்பாட்டிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்காகவும், ஒவ்வொரு பொது அதிகாரமன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களை அடைவதற்கு குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் இந்திய அரசு "2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை "(மத்திய சட்டம் 22/2005) இயற்றியுள்ளது. இச்சட்டம் 15.06.2005 அன்று நடைமுறைக்கு வந்தது. பொறுப்பாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு தகவல் மற்றும் வழிகாட்டுதலுக்காக, மேற்படி சட்டத்தின் பிரிவு 4(1)(b) ஆம் பிரிவின் விதி துறைகளுக்கிணங்க நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரி இக்கையேட்டைத் தயாரித்துள்ளது.

1.2. அரசு மருத்துவக் கல்லூரியின் பணியமைப்பு, அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள், அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் குறித்து பொது மக்களுக்கு தகவல் தெரிவிப்பதே இக்கையேட்டின் நோக்கமாகும்.

1.3. பொதுமக்களின் சேவையை இலக்காகக் கொண்டு அரசு மருத்துவக் கல்லூரி குறித்த தகவல்களைக் இக்கையேடு வழங்குகிறது.

1.4. அரசு மருத்துவக் கல்லூரி குறித்த தகவல்கள் அனைத்திற்கும் நிர்வாக அலுவலர் அவர்களை அதன் பொதுத்தகவல் அலுவலராக மருத்துவக் கல்லூரி நியமித்துள்ளது.

1.5. மேற்படி சட்டத்தின் கீழ் கல்லூரி நிர்வாகம் சார்பில் ஏதேனும் தகவல் அறிய விரும்பினால், பொதுத்தகவல் அலுவலர், அரசு மருத்துவக்கல்லூரி, 353, பெருந்திட்ட வளாகம், சிலுவம்பட்டி, நாமக்கல் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல் அலுவலக தொலைபேசி எண். 04286–294939 ஆகும்.

1.6. தகவல் பெறுவதற்கான நடைமுறை மற்றும் கட்டண விவரம் பின்வருமாறு:

(அ) தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 6ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தகவல்களைப் பெறுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் எழுத்து மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது தபால் மூலமாக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

அது தொடர்பான ரூ.10/–(ரூபாய் பத்து மட்டும்) விண்ணப்ப கட்டணத்தை விண்ணப்பத்தின் மேல் நீதிமன்ற கட்டண வில்லையை ஒட்டி வைத்து அல்லது கேட்பு வரைவோலையாக அல்லது வங்கியாளரின் காசோலை மூலமாக பொதுத்தகவல் அலுவலர், அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல் என்ற பெயருக்கு அல்லது கருவூலச் செலுத்துச் சீட்டு வாயிலாக கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும்.

- 0070, ஏனைய நிருவாகப் பணிகள்– 60 ஏனைய பணிகள் – 118 தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 – கீழ் வரவுகள் – AA தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் பெறப்படும் கட்டணங்கள் – 227 வரியல்லாத கட்டணங்கள் – 39 மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுக் கட்டணங்கள்(த.தொ.கு.0070 60 118 AA 22739)

விண்ணப்பதாரர், கருவூலம் / சம்பளக் கணக்கு அலுவலகம்/பாரத ஸ்டேட் வங்கி இந்திய ரிசர்வ் வங்கி வாயிலாக மேற்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் கட்டணத்தை செலுத்தி, கட்டணத்தை செலுத்தியதற்கு ஆதாரமாக பொதுத் தகவல் அலுவலரிடம் செலுத்துச் சீட்டினை அளிக்கலாம்.

(ஆ) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் தகவல் வழங்குவதற்காக, விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வழிகளில் செலுத்த வேண்டும்.

(i) தயாரிக்கப்பட்ட அல்லது நகலெடுக்கப்பட்ட ஒவ்வொரு பக்கத்திற்கும் இரண்டு ரூபாய் (A4 அல்லது A3 அளவு தாளில்)

(ii) பெரிய அளவிலான தாளின் நகலுக்கான உண்மையான கட்டணம் அல்லது விலை

(iii) மாதிரிகள் அல்லது மாதிரி வடிவங்களுக்கான உண்மையான கட்டணம் அல்லது விலை மற்றும்

(iv) பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கு முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் ஏதுமில்லை. அதன்பின் ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் (அல்லது அதன் பின்னரும்) ரூ5/–(ரூபாய் ஐந்து மட்டும்) கட்டணம்.

(இ) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் (5) உட்பிரிவின் கீழ் தகவல் வழங்குவதற்காக, விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் முறைகளில் செலுத்த வேண்டும்.

(i) வட்டு–இல் வழங்கப்படும் தகவலுக்கு ஒரு வட்டுக்கு ரூ.50/– (ரூபாய் ஐம்பது மட்டும்)

(ii) அச்சிடப்பட்ட படிவத்தில் வழங்கப்படும் தகவல்களை வெளியிடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட விலையில் அல்லது வெளியீட்டில் இருந்து நகல் எடுக்கப்பட்டதற்கு பக்கமொன்றுக்கு இரண்டு ரூபாய்.

1.7 வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நபர்களுக்கு 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் பெறுவதற்கு மேற்சொன்ன பத்தி 1.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கிராம பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களின் பட்டியல் இந்த விலக்களிப்பு சலுகையை கோருவதற்கு ஆதாரமாக இருக்கும். இந்தச் சலுகையைப் பெற, பட்டியலின் சுருக்கம் முறையாகச் சான்றளிக்கப்பட்டு அளிக்கப்பட வேண்டும்.

1.8 மேற்சொன்ன சட்டத்தின் 19 (1) ஆம் பிரிவின் கீழ் முதல்வர் அவர்களை மேல்முறையீட்டு அலுவலராக அரசு மருத்துவக் கல்லூரி, நாமக்கல் நியமித்துள்ளது.

## 2. அரசு மருத்துவக் கல்லூரியின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள் (தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(1)(b)(i) – இன் கீழ்)


இம்மருத்துவக் கல்லூரி 2022 மார்ச் 12 அன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் இளநிலை மருத்துவப் படிப்பு மற்றும் மருத்துவம் சாராக் கல்வி படிப்புகள் மருத்துவக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்படுகிறது. மக்களின் உயிர் காக்கும் மருத்துவப் பணியில் சிறந்த மருத்துவர்களை உருவாக்குவதே இக்கல்லூரியின் முதன்மை நோக்கமாகும். இக்கல்லூரி காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படுகிறது. நிர்வாக அலுவலகம் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்பட்டு வருகிறது.

<u>இக்கல்லூரியில் வழங்கப்படும் படிப்புகள்</u>

| Name of the course | Annual intake | Duration of course |
|---|---|---|
| **MBBS** | **100** | **4 ½ years+1 Year Internship** |
| **B.Sc - Allied Health Science** | | |
| **B.Sc., Radiology and Imaging Technology** | **10** | **3 years + 1 Year Internship** |
| **B.Sc., Respiratory Therapy** | **4** | **3 years + 1 Year Internship** |
| **B.Sc., Operation Theatre and Anesthesia Technology** | **10** | **3 years + 1 Year Internship** |
| **B.Sc., Medical Laboratory Technology** | **10** | **3 years + 1 Year Internship** |
| **B.Sc., Physician Assistant** | **6** | **3 years + 1 Year Internship** |
| **B.Sc., Critical Care Technology** | **5** | **3 years + 1 Year Internship** |
| **DIPLOMA COURSES** | | |
| **Diploma in Radio Diagnosis Technology Courses** | **20** | **2 years + 3 months Internship** |
| **Diploma in Medical Laboratory Technology** | **10** | **2 years + 3 months Internship** |
| **CERTIFICATE COURSES** | | |
| **Emergency Care Technician** | **10** | **1 Year Course + 3 months training** |
| **Anaesthesia Technician** | **10** | **1 Year Course + 3 months training** |
| **Theatre Technician** | **10** | **1 Year Course + 3 months training** |
| **Orthopaedic Technician** | **10** | **1 Year Course + 3 months training** |
| **Multipurpose Hospital Worker** | **20** | **6 Months Course + 3 months training** |

மேற்கண்ட படிப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் செயலாளர், தேர்வு குழு, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, சென்னை மூலமாக மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவ மாணவியர் சேர்க்கைகள் நடைபெற்று வருகின்றன.

# அலுவலக அமைப்பு


முதல்வர்
துணை முதல்வர்
நிர்வாக அலுவலர்
துறைத் தலைவர்கள்
பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், போதகர்கள், இளநிலை உள்ளிருப்பு மருத்துவர்கள், முதுநிலை உள்ளிருப்பு மருத்துவர்கள்
இளநிலை நிர்வாக அலுவலர் - 1
இளநிலை நிர்வாக அலுவலர் - 2
அலுவலக கண்காணிப்பாளர் (நிர்வாகம்)
அலுவலக கண்காணிப்பாளர் (திட்டம் (ம) வளர்ச்சி & கிடங்கு)
அலுவலக கண்காணிப்பாளர் (கணக்கு)
அலுவலக கண்காணிப்பாளர் (மருத்துவக் கல்வி)
உதவியாளர்கள் , இளநிலை உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், தட்டச்சர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்கள்

## 3.அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

**(தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)(b(ii) ன் ன் கீழ் )**

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ், சென்னை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் முதல்வர் தலைமையில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியானது செயல்படுகிறது. உயர்திரு முதல்வர் அவர்கள் இம்மருத்துவக் கல்லூரிக்குத் தலைவர் ஆவார். அனைத்து கல்லூரி நடவடிக்கைகளுக்கும் இவருக்குத் துணையாக ஒரு துணை முதல்வர், 21 துறைத் தலைவர்கள்/பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், உதவி மருத்துவர்கள் ஆகியோரைக் கொண்ட பணியமைப்பும் மற்றும் நிர்வாகப் பிரிவில் ஒரு நிர்வாக அலுவலர், இரண்டு இளநிலை நிர்வாக அலுவலர்கள், நான்கு அலுவலக கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், தட்டச்சர்கள் மற்றும் பிற பணியாளர்களைக் கொண்டும் இக்கல்லூரியானது செயல்பட்டு வருகிறது.

அரசு மருத்துவக் கல்லூரியின் அலுவலர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

- **முதல்வர்**

முதல்வர் அலுவலகத்தின் தலைவர் ஆவார். இவர் அலுவல் விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் விதிகள், தேசிய மருத்துவக் குழும விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைகழக (Dr.MGR University) விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவுகளை கவனமாக கடைபிடிப்பதற்கான பொறுப்புடையவராவார். துணை முதல்வர், பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள், போதகர்கள், நிருவாக அலுவலர்கள், இளநிலை நிருவாக அலுவலர்கள், பிற அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட தனது கட்டுப்பாட்டில் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிகளை பொதுவாக கட்டுப்படுத்தும் பணி மற்றும் கண்காணிக்கும் பணியை மேற்கொள்வதுடன் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை திறம்படவும் விரைவாகவும் அவர்கள் மேற்கொள்வதை உறுதிசெய்யும்

பொறுப்பும் முதல்வரை சார்ந்ததாகும். கொள்கை முடிவுகள் மற்றும் அனைத்து முக்கிய முடிவுகள் எடுப்பது குறித்தும் கல்லூரியின் ஒட்டுமொத்த தலைமைப் பொறுப்பாளரான முதல்வர் முடிவு எடுக்க வேண்டும்.

- **<u>துணை முதல்வர்/பேராசிரியர்கள்/துறைத் தலைவர்கள்/ இணை பேராசிரியர்கள்/ துணை பேராசிரியர்கள் / போதகர்கள்</u>**

துணை முதல்வர்/பேராசிரியர்கள்/துறைத் தலைவர்கள்/ இணை பேராசிரியர்கள்/ துணை பேராசிரியர்கள் / போதகர்கள் ஆகியோர் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருண்மைகள் தொடர்பான இனங்கள் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன், அதில் குறிப்பிடப்பட்டிருப்பின் அதனை முதல்வரின் பார்வைக்கும் சமர்ப்பிக்கவும், மேலும் அவர்களது பொறுப்பிலுள்ள துறைகளின் பணிகள், நடைமுறைகள் மற்றும் அதன் ஒழுங்குமுறை தொடர்பான விவகாரங்களை கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வர்.

- **<u>நிர்வாக அலுவலர்/ இளநிலை நிர்வாக அலுவலர்</u>**

நிர்வாக அலுவலர்/ இளநிலை நிர்வாக அலுவலர் அவர்களது பொறுப்பிலுள்ள பிரிவுகளின் அலுவலகப் பணிகள் நடைமுறை மற்றும் அதன் ஒழுங்குமுறை தொடர்பான விவகாரங்களை கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வர்.

**<u>4. முடிவுகள் எடுப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை</u>**

**<u>(தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)(b(iii) - இன் கீழ் )</u>**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 187 ஆம் பிரிவின் பகுதி (3) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தேசிய மருத்துவக் கழகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைகழகம் (The TamilNadu Dr.MGR University), தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் பணி விதிகள் இயற்றப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு அரசு அலுவல் விதிகள் மற்றும் சென்னை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை இம்மருத்துவக்கல்லூரி பின்பற்றி வருகிறது. தமிழ்நாடு அரசு பணியாளர் சட்டம், 2016 மற்றும் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் ஆகியவற்றையும் இம்மருத்துவக் கல்லூரி பின்பற்றி வருகிறது.

**4.2** மேற்சொன்ன ஆவணமாக்கப்பட்ட நடைமுறைகள்/ வகுக்கப்பட்ட நடைமுறைகள்/ வரையறுக்கப்பட்ட அளவுகோள்கள்/ விதிகள் ஆகியவற்றிற்கு இணங்க விவகாரங்களின் தன்மைகள், தொடர்புடைய முக்கியத்துவம் மற்றும் இருப்பிலுள்ள நிதி முதலியவற்றின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தொடர்புடைய கோப்பானது இளநிலை உதவியாளர் / உதவியாளர்களால் தொடங்கப்பட்டு அலுவலக கண்காணிப்பாளர், இளநிலை நிர்வாக அலுவலர், நிர்வாக அலுவலர் மூலமாக துணை முதல்வர் மற்றும் முதல்வருக்கு அனுப்பப்படுகிறது. அலுவல் விதிகளைப் பொறுத்தமட்டில் முதல்வருக்கு கோப்புகளை சுற்றனுப்ப வேண்டிய நேர்வில் சுற்றோட்டத்தில் ஆணைகள் பெறப்படுகின்றன.

**முடிவு எடுப்பதில் கீழ்க்கண்ட குழுக்களின் ஆலோசனைகள் இக்கல்லூரியில் பின்பற்றப்படுகின்றன.**

- கல்லூரி நிர்வாக குழு – College Council Committee
- கேலி வதை தடை சட்டம் – Anti Ragging Committee
- நெறிமுறை குழு – Ethical Committee
- ஒழுங்காற்று குழு – Disciplinary Committee
- உள்ளகக் குழு – Internal Complaints Committee

யாதொரு பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் பதில் அளிக்கப்பட வேண்டியிருந்தால், முடிவுகள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

**5.பணிகளைச் செய்வதற்காக வகுக்கப்பட்ட விதிமுறைகள் (தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)(b(iv) - இன் கீழ் )**

அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் பல்வேறு சட்டங்கள், விதிகள் மற்றும் அறிவுறுத்தலுக்கிணங்க அன்றாட நிருவாகச் செயல்பாடுகள் நிருவகிக்கப்படுகிறது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் விதிகள்:

(i) 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள்

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தணை) சட்டம், 2016

(iii) தமிழ்நாடு மருத்துவ தொகுப்பு – I மற்றும் II

(iv) தமிழ்நாடு அடிப்படை விதிகள்

(v) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்

## <u>6. பணிகளை செயல்படுத்துவதற்கான விதிகள், ஒழுங்குமுறை விதிகள், நெறிமுறைகள், கையேடுகள் மற்றும் ஆவணங்கள்</u>

<u>(தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)(b(v) - இன் கீழ் )</u>

**அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள பணிகளானது பின்வரும் விதிகள் மற்றும் நடத்தை விதிகள் மற்றும் கையேடுகளில் உள்ள விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.**

1. தேசிய மருத்துவக் குழும விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்
2. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைகழக விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்
3. தமிழ்நாடு உடற்கூறியல் சட்டம் மற்றும் விதிகள்
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனை) சட்டம் 2016
5. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகள்
6. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் விதிகள்
7. 1937 – ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள்
8. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்
9. தமிழ்நாடு அடிப்படை விதிகள்
10. தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு
11. 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்
12. தமிழ்நாடு சார்நிலை பணிகள் விதி
13. தமிழ்நாடு மருத்துவ பணியாளர் சிறப்பு விதிகள் மற்றும் பொது பணியாளர் விதிகள்

14. தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933 மற்றும் தொடர்புடைய திருத்தங்கள்

15. தமிழ்நாடு நிதி தொகுப்பு பகுதி – I & II

16. தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

17. தமிழ்நாடு மருத்துவ தொகுப்பு – I மற்றும் II

18. தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் மற்றும் விதிகள்

19. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் சட்டம் 1985

**7. அலுவர்களின் தொடர்பு எண் 4(1)(b)(IX) இன் கீழ் படி,**

| வ. எண் | பதவி | பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | முதல்வர் | மரு.K.சாந்தாஅருள்மொழி, MD,DA., | **04286–290655** |
| 2 | துணை முதல்வர் | மரு.P. குமுதா, MD., | **04286–294940 – 107** |
| 3 | நிர்வாக அலுவலர் | திரு. M. இரவிசங்கர் | **04286–294940 – 109** |

**8. நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி வரவு செலவு திட்ட ஒதுக்கீடு**

**( தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, 4(I), (b), (XI) –ன் பிரிவின் கீழ்**

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி 2025–2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடாக ரூ. 446387 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**9. கல்லூரியின் செயல்பாட்டு விபரங்கள்**

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியால் வைத்து வரப்படும் அல்லது கிடைக்க கூடிய தகவல்கள் தொடர்பான விவரங்கள், மின்னணு வடிவத்தில் குறைக்கப்பட்டுள்ளது. ( தகவல் பெறும் உரிமை சட்டம் 2005, 4(I), (b), (XIV) –ன் பிரிவின் கீழ்)

பொது மக்கள் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியின் செயல்பாட்டின் விவரங்களை **www.gmcnkl.tn.gov.in** என்ற வலைதளத்தின் வழியாக பெற்றுக் கொள்ளலாம்.

**10. தகவல்களைப் பெறுவதற்கான வசதிகளின் விவரங்கள்**

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4 (1)(b)(xv)– இன் கீழ் அறிவிப்பு பலகைகள், செய்தித் தாள்கள், வலைதளம் மற்றும் ஏனைய விளம்பரங்கள் வழிமுறைகள் வழியாக பொதுமக்கள் தகவல் பெற முடியும்.

**11. பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் பெயர், பதவி மற்றும் இதர விவங்கள் 4(1)(b)(xvi) இன் கீழ் படி,**

| வ.எண் | பதவி | பெயர் | தொலைபேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| 1 | மேல் முறையீட்டு அலுவலர் / முதல்வர் | மரு.K.சாந்தா அருள்மொழி, MD,DA., | 04286–290655 | gmchnkl@gmail.com |
| 2 | பொது தகவல் அலுவலர் / நிர்வாக அலுவலர் | திரு. M. இரவிசங்கர் | 04286–294940 | gmchnkl@gmail.com |

12. மருத்துவக் கல்லூரி பணியிடங்கள் ஒப்பளிப்பு விவரங்கள்

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அரசாணை எண்:58 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள்:04.02.2021 – ன் படி 231 – மருத்துவ பணியிடங்கள் உட்பட 394 நிரந்தர பணியிடங்களும் 30 தொகுப்பூதிய பணியிடங்களும் மற்றும் 17 புற ஆதார பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

**13. கல்லூரியில் செயல்படும் துறைகளின் விபரங்கள்**

இக்கல்லூரியில் கீழ்க்கண்ட துறைகள் மூலம் மாணவ மாணவியர்களுக்கு கல்விகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

1. உடற்கூறியல் துறை (Anatomy )
2. தடயவியல் மற்றும் நச்சுவியல் துறை (Forensic Medicine & Toxicology)
3. சமூக மருத்துவத்துறை (Community Medicine)
4. உடல் செயலியல் துறை ( Physiology )

5. மருந்தியல் துறை ( Pharmacology )
6. உயிர்வேதியியல் துறை ( Bio Chemistry )
7. நோய்குறியியல் துறை ( Pathology )
8. நுண்ணுயிரியல் துறை (Micro Biology)
9. பொது அறுவை சிகிச்சை துறை (General Surgery)
10. பொது மருத்துவத்துறை (General Medicine)
11. மயக்கவியல் துறை (Anaesthesiology)
12. எலும்பு முறிவு மற்றும் முடநீக்கியல் துறை (Orthopaedics )
13. மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவத் துறை (Obstetrics & Gynaecology)
14. காது, மூக்கு, தொண்டை சிகிச்சை துறை (OTO Rhino Laryngology )
15. தோல், பால்வினை நோய் மற்றும் தொழுநோய் துறை (Dermatology, Venerology and Leprosy Department)
16. குழந்தைகள் நலத்துறை (Paediatrics)
17. கண் மருத்துவத் துறை (Ophthalmology)
18. மன நல மருத்துவத் துறை (Psychiatry)
19. நுண் கதிரியல் துறை (Radio Diagnosis)
20. பல் மருத்துவத் துறை (Dentistry)
21. காச நோய் மற்றும் நெஞ்சக மருத்துவத் துறை (Tuberculosis and Respiratory Diseases)

## 14. கல்லூரியில் செயல்படும் திறன் மற்றும் சமூக நலன் விழிப்புணர்வு குழுக்கள்

கல்லூரி மாணவர்களின் திறன் மற்றும் சமூக நலன் விழிப்புணர்வு தொடர்புகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

- விளையாட்டு குழு
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு

- நாட்டு நலப்பணி திட்டம்
- செஞ்சிலுவை சங்கம்
- தமிழ் மன்றம்
- யோகா பயிற்சி மையம்

## 15. உள்கட்டமைப்பு வசதிகள்

- உடற்பயிற்சி கூடம் (ஆண், பெண் என இரு பாலினருக்கும் தனித்தனி வசதி)
- நூலகம், இணைய நூலகம்
- திறன் ஆய்வகம் (Skill Lab)
- உடற்கூறியல் ஆய்வகம்
- விளையாட்டு மைதானங்கள்
- கலையரங்கம்
- சிற்றுண்டியகம்
- சுத்திகரிக்கப்பட்ட RO குடிநீர் வசதி
- வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமரா
- இணையதள வசதி
- தடையற்ற மின்சார வசதி

## 16. மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் பணியாளர் குடியிருப்புகள்

- இக்கல்லூரி வளாகத்தில் மருத்துவ மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே தங்கும் விடுதி வசதிகள் உள்ளன.
- மேலும், உள்ளிருப்பு/ பட்ட மேற்படிப்பு மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே தங்கும் விடுதி வசதிகள் உள்ளன.
- இக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பணிபுரியும் பேராசிரியர்கள், மருத்துவர்களுக்கும் 26 வீடுகள் கொண்ட C & D வகை குடியிருப்பு பகுதியும் ஏனைய பிற அலுவலர்களுக்கு 36 வீடுகள் கொண்ட A வகை குடியிருப்புகளும் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 17. இதர பிற வசதிகள்

- இக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக பிரத்யேகமாக அரசாணை ஆணை எண்:174 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள்: 31.05.2022 –ன் படி ஒரு இந்தியன் வங்கி மற்றும் ஏடிஎம் வசதியுடனும், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு பண்டக சாலையும் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.
- அரசாணை ஆணை எண்:192 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள்: 25.02.2022 –ன் படி இக்கல்லூரி மருத்துவ மாணவிகள் குடும்ப தத்தெடுப்பு திட்டத்தின் கீழ் ஊரக பயிற்சி மையமாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம், எர்ணாபுரம் மற்றும் நகர்புற பயிற்சி மையமாக அரசு நகர்புற சுகாதார நிலையம், நாமக்கல் ஆணையிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.
- இக்கல்லூரியின் உடற்கூறியல் துறை மூலமாக மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு கல்வி பயன்பாட்டிற்காக இறந்தபின் உடல் தானம் செய்யும் திட்டம் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

## 18. கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் பராமரிப்பு

இக்கல்லூரியில் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் விடுதிகள் ஆகியவை தமிழ்நாடு பொதுப்பணித் துறை (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் மூலம் பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 19. இதர சேவை பணிகள்

கல்லூரியின் தூய்மை பணிகள் மற்றும் இதர அடிப்படை பணிகளை சென்னை, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புற ஆதார நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியின் ஆய்வக பயன்பாட்டிற்காக 30 ஆய்வக நுட்புநர்கள் மாவட்ட சுகாதார சங்கம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுப்புதியத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.